புல்லாய் பிறவி தரவேணும்  - கண்ணா
புனிதமான பல கோடி பிறவி தந்தாலும்
ப்ருந்தாவனமிதிலொரு

புல்லாயினும் நெடு நாள் நில்லாது - ஆதலினால்
கல்லாய் பிறவி தரவேணும் - ஒரு சிறு
கல்லாய் பிறவி தரவேணுமே - கண்ணா

கமல மலரிணைகள் அணைய எனது உளம்
புளகித முற்றிடும் பவமற்றிடும் என ஒரு

ஒரு கணம் உன் பதம் படும் எந்தன்மேலே
மறு கணம் நானுயர்வேன் மென்மேலே
திருமேனி என்மேலே அமர்திடும் ஒரு காலே

திரு மகளென மலரடி பெயர்ந்த உனை
தொடர்ந்த ராதைக்கும் இடம் தருவேனே
திசை திசை எங்கணும் பரவிடும் குழலிசை
மயங்கி வரும் பல கோபியருடனே
சிறந்த ரஸமிகு நடம் நீ ஆடவும்
ஸ்ருதியோடு லயமிகு கலந்து பாடவும்
திளைப்பிலே வரும் களிப்பிலே
எனக்கு இணையாரென மகிழ்வேனே
தவ மிகு ஸுரரொடு முனிவரும் இயலா
தனித்த பெரும் பேறடைவேனே

எவ்வுயிர்க்கும் உன் கலக்கு மிறைவனே
யமுனைத்துறைவனே எனக்குமொரு